பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

கீல்ஸ் (KEELS) ஸ்தாபனத்தின் பதப்படுத்தப்பட்ட இறைச்சிவகைகள்
MEELS for MEALS
போன்: 22575
மெடிக்கல் ஹோல்
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

தங்கம் தேயிலை
50 GRAMS NET
TANGAMM TEA
SPECIALLY PACKED FOR THE MEDICAL HALL

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸு புரட்டாதி மீ 04 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 08 ( 20 - 09 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 188

# யுத்த நிறுத்தம் நீடிப்பு மேலும் 5 நாட்களுக்கு

## இந்தியத் தரப்பில் அறிவிப்பு

புதுடில்லி, செப்டெம்பர் 20

யுத்த நிறுத்தம் மேலும் ஐந்து நாட்களுக்கு நீடிக்கப்பட்டிருப்பதாக இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் இன்று செவ்வாய்க்கிழமை (20 ஆம் திகதி) காலை 7 மணிக்கு முடிவடைய இருந்த முந்திய யுத்த நிறுத்தம்—

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25 ஆம் திகதி) காலை ஏழு மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்த நீடிப்புக் குறித்து நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பிரசைகள் பலர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே—

யுத்த நிறுத்தத்தை நீடித்தால் எல்லாத் தமிழ் அமைப்புக்களையும் ஜனநாயகச் செயற்பாட்டுக்குள் கொண்டுவர ஏதுவாகும் என பிரசைகள் பலர் தெரிவித்ததைத் தொடர்ந்தே—

யுத்தநிறுத்தம் நீடிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## அடுத்த பிரதமர் காமினியா, லலித்தா?

கொழும்பு, செப்.20

ஜனாதிபதித் தேர்தலில் ஆளும்கட்சி வேட்பாளராக பிரதம மந்திரி திரு. ஆர். பிரமதாச போட்டியிட விருப்பதால், அடுத்த பிரதமர் யார்? என்ற கேள்வி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

அமைச்சர் திரு.காமினி திசநாயக்கா, திரு. லலித் அத்துலத்முதலி ஆகிய இருவரின் பெயர்கள் தற்போது பரவலாக அடிபடுகின்றன.

இருவரில் ஒருவர் நியமனம் செய்யப்பட்டால் தற்போதைய அமைச்சுக்களுடன் பிரதம மந்திரி பதவியையும் வகிப்பார்.

ஜனாதிபதித் தேர்தல் டிசம்பரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக நவம்பரில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படலாம். நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து, பொதுத் தேர்தல் நடைபெற்று புதிய பிரதமர் தெரிவாகும் வரையான காலப்பகுதியில் திரு.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அரசாங்கம் இரங்காவிட்டாலும், நீதி வழங்காவிட்டாலும் தெய்வம் நீதி வழங்கும் என்ட நம்பிக்கை அவைக்கு நல்லாய் இருக்குது போலை. . . . !

## டிக்ஸிற் கூற்றை மறுத்து புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 20

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற் பிரிவு 18-9-88 திகதியிட்டு வெளியிட்ட அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:

இம்மாதம் 17 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் வடக்கு-கிழக்கு பிரசைகள் இணைப்புக் குழுக்களுடனான கூட்டத்தில் இந்தியத்தூதுவர் டிக்ஸிற் போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை பற்றி எமது தலைவருக்கு செய்தி அனுப்பப்பட்டுள்ளதாகவும் அச் செய்தி அவருக்கு கிடைத்திருப்பதாகவும் ஊர்ஜிதம் செய்துள்ளதாகவும் அறிவித்திருந்தார்.

ஆனால் இதுவரை எந்தவித உத்தியோக அறிவித்தலும் எமது தலைவருக்குக் கிடைக்கவில்லை. இப்படியானபொய்யான தகவல்களை வெளியிட்டுஎமது மக்களை குழப்பத்தில் ஆழ்த்தி எம்மீது பழியைச் சுமத்துவதற்காக திட்டமிடப்பட்ட உண்மைக்குப் புறம்பான செய்தியை இந்தியத் தூதுவர் வெளியிட்டுள்ளார் — என்று கூறப்பட்டுள்ளது.

(இந்த அறிக்கையின் சுருக்கம் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது) (ஒ-10)

## நுண்கலைக் கல்லூரிக்கு இசைக் கருவிகள்

யாழ்ப்பாணம், செப்.20

இராமநாதன் நுண்கலைக் கல்லூரிக்குத் தேவையான இசைக் கருவிகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதற்கென இந்தியாவிலிருந்து பதினைந்து வீணைகள் விரைவில் தருவிக்கப்பட இருக்கின்றன.

ஏனைய இசைக் கருவிகளை உள்ளூரில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் இசைக் கருவிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதன் காரணமாக எதிர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எடுத்த எடுப்பிலேயே ஆயுதத்தை கேட்காது யுத்தநிறுத்தத்தை நீடிக்குக

### வவுனியாப் பிரமுகர்கள் வற்புறுத்து

வவுனியா, செப். 20

எடுத்த எடுப்பிலேயே ஆயுதங்களைக் கேட்காமல் விடுதலைப் புலிகளுடன் சமரசமாகப் பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வசதியாக போர் நிறுத்தத்தை நீடிக்க வசதிசெய்யவேண்டும்.

வவுனியாவில் ஞாயிறன்று நடைபெற்ற இந்தியத் தூதுவர் டிக்ஸிற் — பிரமுகர்கள் சந்திப்பின்போது பிரமுகர்கள் தரப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

பிரமுகர்கள் தரப்பில் மேலும் அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:

அனைவருமே அமைதியைத்தான் விரும்புகின்றார்கள். ஆகவே சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் குறிப்பாகப் புலிகளுடனும் கலந்து பேசி இணக்கம் காணப்படவேண்டும்.

தொடர்ச்சியானஇராணுவ நடவடிக்கைகள் காரணமாக உயிரிழப்பு, உடைமைகள் இழப்பு போன்றவைக்கு ஆளாகியுள்ள நிலைமையில் பொதுமக்கள் இப்போது தேர்தலுக்கு ஆயத்தமில்லை.

இந்தச் சூழ்நிலை தேர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஒட்டுத் தொழிற்சாலை இயங்குகிறது

ஒட்டுசுட்டான், செப்.20

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுசுட்டான் ஒட்டுத்தொழிற்சாலை மீண்டும் இயங்கத்தொடங்கி விட்டது.

பிரஸ்தாப தொழிற்சாலையில் கடந்த சில மாதங்களாக இந்திய அமைதிப்படையினர் நிலை கொண்டிருந்தனர்.

தொழிற்சாலை சேதமடைந்திருந்து இயங்கத்தொடங்கியதை அடுத்து மீண்டும் ஓடு, செங்கல் என்பனவற்றின் உற்பத்தி தொடங்கி உள்ளது. (ஒ-113)

### சுபநேரம்

20 - 09 - 1988
புரட்டாதி - 04
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.32முதல் 12.02வரை
ராகுகாலம்:
03.02முதல் 04.32வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## தொழிற்சங்கம் நடத்தும் யாகம்!

கொழும்பு, செப். 20

கொழும்பில் ஆயுர்வேத வைத்தியர்கள் தொழிற்சங்கம் தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க மந்திர யாகம் ஒன்றை நடத்த முடிவு செய்திருக்கிறது.

தொழிற்சங்கம் ஒன்று தனது கோரிக்கைகளை மந்திர தந்திரங்களை நாடியிருப்பது இதுவே முதல் தடவை என்று பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது. (அ-எ)

## வட - கிழக்கு மாகாணசபைத் தேர்தல்: அக். 3 முதல் 10 வரை நியமனப்பத்திரம் தாக்கல்

கொழும்பு, செப். 20

வடக்கு—கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களைத் தேர்தல் ஆணையாளர் கோரியிருக்கிறார்.

அடுத்த மாதம் அக்டோபர் 3 ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி நண்பகல்வரை நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கின்றார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களில் உள்ள கச்சேரிகளில் அந்தந்த மாவட்டங்களுக்குரிய நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வடக்கு—கிழக்கு மாகாணசபைக்கு 71 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், குழுக்கள் மொத்தம் 95 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலைச் சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்தல் 1982ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் நடக்கும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநராக திரு. ஷெல்டன் ரணராஜா நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று ஜனாதிபதி நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தல் பற்றி ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அறிக்கை ஒன்று நேற்று வெளியிடப்பட்டது.

அறிக்கையில் கூறப்பட்ட விபரங்கள் வருமாறு:-

★ நவம்பர் நடுப்பகுதிக்கு முன்னர் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தி முடிக்கும்படி தேர்தல் ஆணையாளரை ஜனாதிபதி கோரியிருக்கின்றார்.

★ தேர்தலில் போட்டியிட விரும்பும் சகல அமைப்புக்களுக்கும் குழுக்களுக்கும் அங்கீகாரம் வழங்கும்படி தேர்தல் ஆணையாளர் கோரப்பட்டுள்ளார்.

★ தேர்தல் 1982 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு அடிப்படையிலும் மீளாய்வு செய்யப்பட்ட 1987 வாக்காளர் இடாப்பு அடிப்படையிலும் நடத்தப்படும். இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிக்கவும் வசதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் அமையவிருக்கும் யாழ். பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தில் புதிய பிரிவுகள்

### உபவேந்தர் தகவல்

யாழ்ப்பாணம், செப்.20

கிளிநொச்சியில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் கடற்துறை பொறியியல் (Marine Engineering), கரையோரப் பகுதி துறை பொறியியல் (Coastal Engineering) ஆகியவற்றுக்கான பட்டப்படிப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட இருக்கின்றன.

யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை அமைப்பது குறித்து ஆராய்ந்துவரும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உபகுழு, பொறியியல் பீடத்தை கிளிநொச்சியில் அமைப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கி இருக்கிறது.

1990 ஆம் ஆண்டில் யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் இந்தப் பீடத்திற்கு ஐம்பது மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் பின்பு இந்த எண்ணிக்கை நூறாக அதிகரிக்கப்படும். இறுதியாக நூற்றிஐம்பது மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

இந்தப் பீடத்தில் எட்டுப் பிரிவுகள் நிறுவப்படும். இந்தப் பீடத்தில் சிவில், மெக்கானிக்கல், எலெக்ரிக்கல் ஆகிய பொறியியல் துறைகளுக்கான வசதிகள் செய்யப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இஸ்ரவேலின் செயற்கைக் கோள்

டெல்அவிவ், செப் 20

இஸ்ரவேல் முதன்முறையாக செயற்கைக் கோள் ஒன்றை நேற்று வானவெளிக்கு அனுப்பியது.

தகவல் தொடர்பு அலுவல்களுக்கு இச் செயற்கைக்கோள் பயன்படுத்தப்படும் என்று இஸ்ரவேல் நேற்று அறிவித்தது. (ஒ-எ)

## பாடசாலை மாணவர் பெரும் எண்ணிக்கையில் நேற்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப்.20

தியாகி திலீபனின் ஓராண்டு நினைவை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் உண்ணாவிரதம் நேற்று ஐந்தாவதுநாளாகத் தொடர்ந்தது.

நேற்றுப் பெருமளவில் பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர். அவர்கள் யாவரும் சீருடையில் வந்திருந்தனர்.

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இன்றும் குடாநாட்டின்பலபகுதிகளிலிருந்து மேலும் பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொள்வர். (ஒ-9)

## திலீபனின் ஓராண்டு நிறைவையொட்டி பல்கலைக்கழக மாணவர் 26 வரை விரிவுரை பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், செப் 20

தியாகி திலீபன் உயிர் நீத்த ஓராண்டுநிறைவை நினைவு கூருமுகமாக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை தமது விரிவுரைகளை முற்றாகப் பகிஷ்கரித்துள்ளனர்.

யாழ் பல்கலைக்கழகத்தின் கலைக்கவுன்சில் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமையன்று எட்டுமணி முதல் பிற்பகல் நான்கு மணிவரை பல்கலைக்கழக வளவினுள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவும் தீர்மானித்துள்ளனர் என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ-ஐ)

### திருமலையிலும் திலீபன் நினைவு

யாழ்ப்பாணம், செப். 20

உண்ணாவிரதம் இருந்து வீரசுவர்க்கமடைந்த திலீபனின் ஓராண்டு நினைவு தினத்தையொட்டி திருகோணமலையிலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

திருகோணமலையின் பல இடங்களிலும், கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு ஆலயங்களில் பிரார்த்தனைகளும் நடைபெற்று வருகின்றன.

திலீபனின் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

யுத்த நிறுத்த காலங்களில் திருகோணமலை மாவட்டத்தில் எதுவித அசம்பாவிதங்களும் நிகழவில்லை எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-10)

## திலீபனுக்கு மணிமண்டபம்; 24ஆம் திகதி அடிக்கல்

### ஊரெழுவில் அஞ்சலிக் கூட்டமும்

யாழ்ப்பாணம், செப் 20

தியாகி திலீபனின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு அவரது பிறந்த ஊரான ஊரெழுவில், அவ்வூர் பிரசைகள் குழுவினர் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

ஊரெழுவில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தக் கூட்டத்துக்கு ஊரெழு பிரசைகள் குழுத் தலைவர் திரு. க. குலேந்திரன் தலைமை வகிப்பார்.

பிரஸ்தாப பிரசைகள் குழுச் செயலாளர் திரு. க. சிவசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்த உள்ளார்.

அன்றைய தினம் 11

(6-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சகலவித பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கசற்றேடியோ, மெஷின் Record Player, Cake Mixer, சாப்பாட்டு மேசை, கதிரைகள், கண்ணாடி மேசை, Easy Chair, Show case, Baby cot, சட்டில்கள், Toaster, Boiler கேற்றில், விறுந்தைகதிரை, மேசைகள், மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 120, இராசாவின் தோட்டம் றோட், யாழ்ப்பாணம். (6680)

அழிக்கப்பட்ட லொறி ரயர்கள் (அளவு 900-20) 7ரூபா வீதம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: சிவலிங்கம் மோட்டோர்ஸ் 25, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (6531)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் B.M.C ஒழுங்கையில் சகல வசதிகளுடன் 2 பரப்பு வீடு வளவு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வே. சிவரட்டிணம். 25/3, B. M. C. ஒழுங்கை, யாழ்ப்பாணம். (6528)

### காணி விற்பனை

மருதனமடம் இராமநாதன் கல்லூரிக்கு அண்மையில் யாழ்- கே. கே. எஸ். வீதியில் றோட்டு முகப்புடைய பத்துப் பரப்புக்காணி விற்பனைக்குண்டு: தொடர்பு, இல, 360, C/O, உதயன் யாழ்ப்பாணம். (6535)

### விற்பனையாகின்றது புதியவெளியீடுகள்

அழகியற் கல்வி - குழந்தைகளுக்கான இன்பத் தமிழ்ப் பாடல்கள் ஆண்டு 1&4, விலை ரூபா -15, புதிய சமூகக்கல்வி பாடப் பொழிப்பும் தொழிற்பாடும் பயிற்சிகளும், ஆண்டு 6- விலை ரூபா 15 ஆண்டு7 ரூபா 25, கிடைக்குமிடம் ஞானசுரபி புத்தகச் சம்பனி, யாழ்ப்பாணம். (6532)

### இலத்திரனியல் ஆண்டு—11

விஞ்ஞான ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உதவும் வகையில் வினுக்களுடன் உள்ளடங்கிய மேற்படி புத்தகம் பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனையாகின்றது. (6693)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்கட்கு நாடுங்கள் "சக்தி சரவணா" (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடம், மட்டக்களப்புபாரம்பரிய பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ்/ இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (6510)

## தேவை

புதிதாக ஆரம்பித்த யாழ் றிக்கோ சுவீற் அன் கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்திற்கு புரியாணி தயாரிப்பதில் நன்கு அனுபவமுடையவர்கள் தேவை. நேரில் வரவும். 352, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (6683)

சோடா (Aerated Water) அடைக்கும் இயந்திரம் கைவசம் உள்ளவர்கள் எம்முடன் உடன் தொடர்பு கொள்க. சமூக அபிவிருத்திச்சபை 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C/ 239)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சுண்டிக்குளி, அரியாலைப் பகுதிகளில் வீடுகட்டக்கூடிய காணி தேவை. விபரம்:-J.P.T Ltd 3, நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம். (6545)

கொழும்பில் தலைமை நிலையத்தைக் கொண்ட பிஸ்கட் கம்பனிக்கு யாழ்ப்பாணத்தில் பிஸ்கட் பைக்கிங் செய்வதற்கு அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. உடன்வரவும். (9.a.m- 4.p.m) யாழ்நகர வாசிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு; 144/2 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (6541)

கேற், கிறில் செய்யக்கூடிய வெல்டர்களும், ரிங்கர் வேலையாட்களும் தேவை. தொடர்பு:- சிவலிங்கம் மோட்டோர்ஸ், 25, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (6530)

### சிறிய கடை தேவை

யாழ். நகர் பகுதி எல்லைக்குள் மணிக்கூடு திருத்துவதற்கு ஏற்ற, ஒரு சிறிய கடைதேவை. உடன் தொடர்பு கொள்ளவும். No: 366 C/o உதயன், யாழ்ப்பாணம். (6523)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் Non R. C மணமக்கள் பலர் எல்லாச் சாதியிலும் இருக்கிறார்கள். மாற்றுச் சம்பந்தத்தை விரும்புவோர்கூட நல்ல உத்தியோகங்களில் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் நேரில் வரவும். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (6521)

### மணமகள் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில்புரியும் 5' உயரமுடைய சைவ வேளாள குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 25 – 35 வயதிற்கு இடைப்பட்ட மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்: இல. 367, C/o உதயன், யாழ்ப்பாணம். (6542)

### திருமண சேவை

உங்கள் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று உங்கள் பிள்ளைகளின் திருமணமே. இதற்கு நீங்கள் நாடவேண்டியது எங்கள் சேவையையே! "சுபமங்களமாலை" No.11, பிறவுண் றோட், ஸ்ரேசன் வியூ, கொக்குவில். (6529)

### மழைப் போர்வைகள்

மழைகாலப் பாவனைக்குரிய மழைப் போர்வைகள், (Rain Coats) தற்போது எமது தயாரிப்பில் உள்ளன. சகல அளவுகளிலும் கிடைக்கும். மேலதிக விபரங்களுக்கு ராம் சன்ஸ் பிரயாணப் பொருள்கள் தொழிலகம் சுதுமலை வடக்கு, மானிப்பாய். (6516)

### சேவை

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெராசோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும். சதுர அடி 30 — 36 வரை தொடர்பு: N.P. லோகேஸ்வரன், No. 33 மூத்த விநயகர் 1-ஆம் ஒழுங்கை, சச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். (6151)

## கல்வி

### G. C. E. (O/L) New Syllabus

மேற்படி பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினுத்தாள்களும், விடைகளும் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- சகல புத்தகசாலைகளிலும்கிடைக்கும். உயர்கல்விப் பதிப்பக வெளியீடுகள். (6651)

### G.C.E. A/L Home Economics

எதிர்வரும் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள A/L மனைப் பொருளியல் செயல்முறை பரீட்சைக்கான விளக்க வகுப்புக்களும் Aug 89 மனைப் பொருளியல் பரீட்சைக்கான Theory Classes உம் ஆரம்பம் 19-9-88 பி. ப 3.00 Kalalayaah, Victoria Road, Jaffna. (C225)

### காவிகள்

A/L பிரயோக கணித நான்கு வினுக்களுக்குப் பயிற்சியளிக்கும் படிமுறைப் பயிற்சி நூல் "காவியும் அதன் பிரயோகங்களும்" வெளிவந்து ஊட்டது. 125 வினுக்களையுடையது. யாழ், கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை நகரெங்கிலும் கிடைக்கும். ஆசிரியர்: சி. துரையப்பா, St John's College Jaffna. (6537)

### AL இரசாயனம்

Brown Road, A/L 89 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஒரு வருட வகுப்புக்கள் பிரிவு I திங், செவ், புதன், வியா, வெள்ளி சேதன இரசாயனம். ஆரம்பம்: (20 - 9 - 88) செவ். 4.30P.m, (செவ். வியா, 4.30 p.m) பௌதிக இரசாயனம், ஆரம்பம்: (23 - 9 - 88) வெள்ளி 4.30 p.m பிரிவு II ஆரம்பம்: 24-9-88 சனி 4.30pm (சனி, ஞாயிறு 4.30-6.30 pm) முழுப்பாடத் திட்டமும் வினு விடைகளும் செய்யப்படும். (6536)

## காணவில்லை

14-9-88 அன்று யாழ் நகரிலிருந்து வவுனியாவிற்கு காலை 6 மணயளவில் புறப்பட்ட 29 Sri 4583 இலக்க மினிபஸ் வண்டியில் Brown Colour Travelling Bag ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6533)

கந்தையா ஜெயகரன் நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறை ஆகிய எனது அடையாள அட்டை 10-9-88 அன்று நல்லூர் கோயிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது அக்ரோதவாஸ், 166, Hospital Rd, யாழ்ப்பாணத் (சங்கரப்பிள்ளை கட்டிடம்) தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6534)

## கோழிக்குஞ்சு

### தாரா, கோழிக்குஞ்சுகள்

நல்ல இன ஒரு நாள் பேடு, புறயிலர், சேவற் குஞ்சுகளும், கறுப்பு, வெள்ளை தாராக்குஞ்சுகளும், 30ஆந் திகதி விநியோகிக்கப்படும். மேலதிகவிபரங்களுக்கு; கால்நடை வளர்ப்போர் சங்கம். சுன்னுகம் கிளை, (பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் காரியாலயம்) காங்கேசன்துறை வீதி, சுன்னுகம். (6700)

நீங்காத நினைவலைகள்

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
பங்கிராஸ் ஏபிரகாம்லிங்கன்
(BALAN)

தாயின் மடியில்: 11-03-1966 தனக்கெனமுடிவு: 23-06-1988

எங்கள் அன்புத் தெய்வமே!

கண்மணியே! எங்கள் குடும்ப விளக்காய்ச் சுடர் விட்டு எரிவாய் என்று காத்திருந்தேனடா! உன் அப்பா மரித்த பின் குழந்தையாய் உன்னை வளர்த்து எடுத்த நன்றியையும் மறந்து, பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் வளர்ந்து மாயமாய் மறைந்தாயோ, பாலா!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கிறோம்.

உமது பிரிவால் வாடும்:
அம்மா, அக்கா, அண்ணுமார்,
அண்ணி, உற்றார், உறவினர்கள்.

"மலர் பவனம்"
பரிவலர் துரையப்பா வீதி,
தெல்லிப்பளை. (6574)

# விஸ்வமடுப் பகுதி மக்களுக்கு மேலதிக உணவு விநியோகம்

புதுக்குடியிருப்பு, செப்20

விஸ்வமடு மக்களுக்கு இரண்டு மாதத்துக்கான மேலதிக உணவு விநியோகிக்கப்பட இருக்கிறது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலத்துக்கு இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர்கள் திரு. க. தனபாலசிங்கம் திரு. அ. இராசரத்தினம், காணி அபிவிருத்தி அதிகாரி திரு. மாசிலாமணி ஆகியோர் விஸ்வமடுக் கிராமத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு அப்பகுதியின் நிலையை நேரடியாகக் கண்டும், கேட்டும் அறிந்து கொண்டனர்.

இது பற்றி கூட்டாகத் தங்கள் அறிக்கையை அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்திருந்தனர்.

அறிக்கையைப் பெற்றுக்கொண்ட உதவி அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் கொழும்புசென்று அப்பகுதி மக்களின் பரிதாப நிலையை எடுத்து விளக்கியதைத் தொடர்ந்தே அவர்களுக்கு மேலதிக இரண்டு மாத உணவு விநியோகம் உடனடி நிவாரணமாக வழங்கப்பட உள்ளது. (இ-126)

## சமுதாயத்தின் நற்பிரசைகளாக ஒவ்வொருவரையும் வாழ வைப்பதே சர்வோதய நோக்கம்

பருத்தித்துறை, செப் 20

"சமூகத்தில் புரையோடிப்போன அடிப்படைத் தீய பழக்கவழக்கங்களில் இருந்து மக்களை விடுவித்து ஒவ்வொருவரையும் சமுதாயத்தில் நற்பிரசையாக வாழ வைப்பதே தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் நோக்கம்" மேலைப் புலோலி சதாவதானி பாலர் பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி தம்பசெட்டி மல்லிகைக் கலட்டி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது வடமராட்சி சர்வோதயப் பொறுப்பாளர் திரு. ப. தில்லைநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

இப் போட்டி சட்டத்தரணி திரு. செ. கணேசராசாவின் தலைமையில் நடைபெற்றது.

அவர் அங்கு தொடர்ந்துபேசுகையில் "யாழ் மாவட்டத்தில் உள்ளஒவ்வொரு கிராம மக்களுடனும் தொடர்பு கொண்டு, அடிப்படை வசதிகளற்ற கிராம மக்களின் 3 வயதுக்கும் 5 வயதுக்கும் உட்பட்ட சிறுர்களின் கல்வி வசதி, போஷாக்குவசதி போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுக்க ஆவன செய்து வருகின்றோம்" என்றார்.

வடபிராந்திய சர்வோதய வெளிக்கள இயக்குநர் திரு. கி. சிவசுப்பிரமணியம் பேசுகையில்; "சர்வோதயசிரமதானச் சங்கம், ஒவ்வொரு கிராமத்திலும் அத்தியாவசிய அடிப்படை வேலைகளைத் தேவைகளைப் பொறுத்து செய்து வருகிறது. இவ்வேலைத்திட்டங்கள் அந்தந்தக் கிராமத்து மக்களின் சக்தியுடனும் எமது தொண்டர்களின் உதவியுடனும் எமது ஸ்தாபனத்தின் சிறு நிதியுதவியுடனும்செய்து வருகின்றோம்" என்றார்.

கமிலன் இல்லம் 114 புள்ளிகளையும் கம்பன் இல்லம் 109 புள்ளிகளையும் பெற்றன.

வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசில்களை விழாவின் பிரதம விருந்தினரும் வடபிராந்திய சர்வோதய வெளிக்கள இயக்குநருமான உயர் திரு. கி. சிவசுப்பிரமணியம் வழங்கினர். (இ-118)

## கடற் கொள்ளையில் ஈடுபட்டு வந்த ஒருவர் மீனவர்களிடம் மாட்டிக் கொண்டார்

குருநகர், செப், 20

கடற் கொள்ளைகளில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்த கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் குருநகர் மீனவர்களிடம் வகையாக அகப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு கக்கடதீவுப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

பிளாஷ்டிக் படகில் ஆயுத பாணியாக வந்த மூவரில் ஒருவர் குருநகர் மீன்பிடிப் படகுக்குள் பாய்ந்து 'கொம்பாஸ்' மற்றும் பெறுமதியான பொருள்களைகொடுக்கும்படி மிரட்டினராம்.

காற்றின் உதைப்பில் இருபடகுகளின் இடைவெளி பெரிதானதைப் பயன் படுத்திய மீனவர்கள் கொள்ளைக்கு வந்த அந்நபரை மடக்கிக் கரைக்கு கொண்டுவந்து சேர்த்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மீனவர்களால் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட நபரிடம் விசாரித்ததில் இருந்து மேலும் தகவல்கள் தெரியவந்தன.

ஆயுதபாணியாககடற் கொள்ளையில் ஈடுபடும் கோஷ்டி ஒன்றில் அங்கம் வகிக்கும் அந்நபர் தெரிவித்ததாவது:-

கடலில் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் படகுகளில் 'கொம்பாஸ்' வலைகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் மட்டுமன்றி பிளாஷ்டிக் படகுகளையும் கொள்ளையடித்து இந்தியாவுக்குகொண்டுசென்று விற்றுக் காசாக்குவதாகவும் அவர் ஒப்புக்கொண்டார்.

மேற்படி நபர் அங்கம் வகிக்கும் கொள்ளைக் கோஷ்டியினர் ஈடுபட்ட கொள்ளைச் சம்பவங்களில் பல மன்னர் பகுதிகளில் இடம்பெற்றதால் தலைமன்னர் கடற்றொழிலாளர் சங்கத்துடன் தொடர்பு கொண்டகுருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட நபரை அச்சங்கத்திடம் மேலும் விசாரணைக்காகக் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-51)

### பாடசாலையில் மது ஒழிப்பு கருத்தரங்குகள்

மானிப்பாய், செப் 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில், மது போதையை ஒழிப்பதற்கும், போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்குமான தொடர்ச்சியான கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

போருட் நிறுவனம் இக் கருத்தரங்குகளை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

மானிப்பாய், வட்டுக்கோட்டை, காங்கேசன் துறை ஆகிய கல்வி வட்டார பாடசாலைகளில் இக் கருத்தரங்குகள் நடத்தப்பட இருக்கிறது. (ஓ-90)

### மண்டைதீவில் விளையாட்டுப் போட்டி

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இம் மாதம் 28 ஆம் திகதி புதன்கிழமை வித்தியாலய அதிபர் திருமதி சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறும்.

விளையாட்டு போட்டியில் பிரதம விருந்தினர்களாக யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் தம்பதிகள் கலந்து கொளவார்கள். (ச-88)

### சிங்கள தேர்வுப் பரீட்சை

வடமராட்சி, செப்.20

வடக்குக், கிழக்கு தமிழ் உத்தியோகத்தர்களுக்கான சிங்களத் தேர்வுப் பரீட்சை இம் மாதம் 26 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது.

மேற்படி பரீட்சை சுமுகமான ஒரு சூழ்நிலையில் நடைபெற்ருல் அது மிகவும் உதவியாக இருக்கும் என சம்பந்தப்பட்ட பலரும் கருதுகின்றனர். (ஓ-சி-160)

### திருடர் அட்டகாசம்

சங்கானை, செப் 20

சங்கானைப் பகுதியில் இரவுநேர திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

அண்மையில் பழைய தபாற் கந்தோர் வீதி, பாரதி வீதி என்பவற்றில் நடமாடிய திருடர்கள் அப்பகுதியில் நாய் ஒன்றை வெட்டி விட்டுச் சென்றுள்ளனர்.


## முக்கிய அறிவித்தல்

21-9-88 புதன்கிழமையிலிருந்து வகுப்புக்கள் யாவும் (சனி, ஞாயிறு உட்பட) வழமை போல் நடைபெறும் என்பதை சகல மாணவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

அதிபர்
விக்ஞேடியூசன் சென்ரர்
யாழ்ப்பாணம். (C-240)

## VACANCIES IN SAUDI ARABIA

1. ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் Hospital Cleaners } 400 SR
2. எயர்போட் கிளீனர்ஸ் Airport Cleaners } 400+100

வயதெல்லை 21 – 49 வரை

இரண்டு வாரத்திற்குள் பிரயாணம் செய்யலாம்.

T. V. TRAVELS & TOURIST
Brown Road,
(Railway Station Front)
KOKUVIL. (C/208)

## காணி விற்பனைக்கு

தாவடி பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் மானிப்பாய் - தாவடி றோட்டிலிருந்து 200 யார் தூரத்தில் 19½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. நல்ல நிலையிலுள்ள வீடும், நல்ல நீருள்ள வற்ருத கிணறும் உண்டு. குடியிருப்பதற்கும் தோட்டச் செய்கைக்கும், பண்ணை அமைப்பதற்கும் (Farm) கைத்தொழில் நிலயம் அமைப்பதற்கும் மிகவும் உகந்தது.

தொடர்பு;
K. S. முத்துலிங்கம் (Royal)
நவாலி தெற்கு, மானிப்பாய்.
சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடி. (C/242)

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!

## PHYSICS Day Classes

ஆரம்பமாகிவிட்டன.
(திங்கள் முதல் வெள்ளி வரை)
Batch I 9.00 - 10.15 a.m (ஒட்டமின்னியல்)
Batch II 1.30 - 2.45 p.m (சடப்பொருளின் இயல்புகள்)

ஆசிரியர்
R. சத்தியசீலன்
இல. 21, மணல்தரைலேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (C-243)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வடமராட்சி கிழக்கு மக்களுக்கு

# பாவனைக்கு உதவாத பொருளை நிவாரணமாக வழங்குவதாகப் புகார்

தாளையடி செப் 20

வடமராட்சி கிழக்கு மக்களுக்குவழங்கப்பட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் நிவாரண உணவுப் பொருள்கள் மக்களின் பாவனைக்கு உதவாத சுகாதாரக் கேடான பொருள்களாக உள்ளதாகப் பொது மக்களால் புகார் செய்யப்படுகின்றது.

அரிசி, பருப்பு, சீனி ஆகிய உணவுப் பொருள்களே பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செஞ்சிலுவைச் சங்கத்தின் நிவாரண உணவுப் பொருள்கள் என வழங்கப்பட்டுள்ளது.

அரிசி புழுக்கூடுகளை உடையதாகவும், பருப்பு பூச்சிகளினால் சேதப்படுத்தப்பட்டு துவாரங்கள் உடையதாகவும் காணப்படுகின்றது.

பாவனைக்கு உதவாத இப்பொருள்களைப் பெற்ற மக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளார்கள்.

கடந்த கால சம்பவங்களில் பாதிப்படைந்த மக்களுக்கு வழங்கப்படுவதாக இருந்த இந்த உணவுப் பொருள்கள் பின்பு இலங்கை அரசாங்கத்தினால் முன்பு வழங்கப்பட்ட கடல் வலய நிவாரண உணவு முத்திரையை வைத்திருந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

(ஒ-144)

## அரச அதிபர் நடவடிக்கை

மாங்குளம், செப் 20

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே.பொன்னம்பலம் அப்பகுதி மக்களின் கஷ்டங்களை நேரில் பார்வையிட்டு, வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளார்.

அப்பகுதி மக்களின் தேவைகளை உடனுக்குடன் ஏற்படுத்திக் கொடுப்பதோடு, மேலும் நிவாரண உதவிகளையும் பெற்றுக் கொடுக்க தன்னாலியன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். (ஒ-94)

## அதிபர் போட்டிப் பரீட்சை: கருத்தரங்கு வவுனியாவில்

வவுனியா, செப்,20

முதலாம், இரண்டாம், மூன்றும்தர அதிபர் போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு ஒன்று வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வவுனியா மாவட்டக்கிளை, கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் இதனை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இக்கருத்தரங்கு இம்மாதம் 29ஆம் 30ஆம் திகதியும் அடுத்த மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளிலும் 4 நாட்கள் நடைபெறும். (ஒ-164)

## இவர்கள் இல்லையே!

மாங்குளம், செப் 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் சங்கீத, நடன ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருக்கின்ற போதிலும், கடந்த மாதம் இருபத்தைந்தாம் திகதி வெளிவந்த வர்த்தமானியில் முல்லைத்தீவு தவிர்ந்த மற்றைய இடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

இதனால் இப்பிரிவிற்கு விண்ணப்பிக்கும், இந்த மாவட்டப் பகுதி மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

(ஒ-கி-94)

## படையினர் வீதி திருத்தம்

வடமராட்சி, செப் 20

காங்கேசன்துறைக்கும் தொண்டமானாறுக்கும் இடைப்பட்ட பிரதான வீதியைக் கடந்த சில நாட்களாக அமைதிப் படையினர் தார் ஊற்றித் திருத்தும்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஒ-160)

## சிரமதானம்

சங்கானை, செப் 20

வலிமேற்கு பிரதேச சபையின் சங்கானை உப அலுவலகத்துக்குச் சொந்தமான விளாவெளி மயானம் நாளை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

சங்கானை, பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் பகுதி பொதுஸ்தாபனங்களின் உதவியுடன் வலிமேற்கு பிரதேச சபை ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் இச்சிரமதானம் நடைபெறவுள்ளது

(ச 29)


# Harvard Institute

SUCCESSORS OF

# Cantabia Institute

அன்று CANTABIA ! இன்று HARVARD !!

ஆம், பெயர்மாறினாலும் இடம் மாறாத, சேவை குன்றாத, கணக்கியல், கொம்பியூட்டர் துறைகளில் தனித்துவம் வாய்ந்த ஒரே கல்வி நிறுவனம்.

**ஆரம்பமாகின்றன கொம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள்**
**25ஆம், 26ஆம் திகதி புதிய பிரிவுகள்**

**Diploma in Computer Programming**
and
**Data Processing**
**Basic Language** - 6 Months Course

வார நாட்களிலும், சனி, ஞாயிறு நாட்களிலும்
இரு தனித் தனிப் பிரிவுகள்

தகைமையும், திறமையும், ஆற்றலும், அனுபவமும் மிக வாய்ந்த போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர்கள்,

ஆரம்பம்:
வார நாள் வகுப்புகள்: 21-09-1988
புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு வகுப்புகள்: 24-09-1988
சனி காலை 10.00 மணி
கட்டணம்: ரூபா 1500/-
(மூன்று தவணைகளில் செலுத்தலாம்)

மேலதிக விபரங்களுக்கு.

**HARVARD INSTITUTE**
(SISTER ORGANIZATION OF OXONIA, COLOMBO.)
&
(PIONEER IN COMPUTER EDUCATION)
No. 21, MAIN STREET,
JAFFNA.
(2ஆம் குறுக்குத் தெரு வழியாக வரவேண்டும்.)

(C 229)


# தமிழ் தந்த காவியத் தலைவனே! கலியுகத்தின் வீர மறவனே திலீபா!!

## லெப். கேர்ணல் திலீபன்



தமிழுக்காக உதயம்: 29-11-1963

தமிழுக்காகத் தியாகம்: 26-09-1987

இவன் ஒரு தன்மானத் தமிழன்
தமிழினத்தின் மானம் காக்க
தண்ணீரும் மறுத்து உயிர் துறந்து
புதியதோர் வரலாறு படைத்தான்
விடுதலை தேடிய இவ் வெண்புறுவின்
இலட்சியங்கள் நிறைவேறும் நாள்
வெகு தூரத்திலில்லை!

வட பிராந்திய போக்குவரத்துச் சபை
[பருத்தித்துறை]
வடமராட்சி மக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசியது போதும் இனி செயல்தான் வேண்டும்

## வித்துவான் வேலன் கூறுகிறார்

வடமராட்சி, செப். 20

ஈழத் தமிழரைப் பொறுத்த மட்டில் தமிழன் பேசியது போதும். செயல்தான் வேண்டும்.

பருத்தித்துறையில் நடைபெற்ற மாணவர் பொது நூலகத் திறப்பு விழாவில் வித்துவான் வேலன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

பெரிய நாடுதான் எமக்குத் தலைமை வகிக்க வேண்டும் என்ற நிலை மாறி உலகின் ஆறுகோடி தமிழர்களின் நலன் காக்கும் பணிக்குத் தலைமை வகிக்கப் போகிறவர்கள் ஈழத் தமிழர்களே.

இப்படி அவர் கூறினார். (இ- 160)

## திலீபன் நினைவு மண்டபம்

தாளையடி, செப் 20

திலீபனின் நினைவாக பள்ளிப் பகுதியில் பாடசாலை மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரசைகள் குழு, வர்த்தகர் சங்கம், மாணவர் ஒன்றியம் ஆகியன சேர்ந்து இம் மண்டபத்தை அமைக்கவுள்ளன.

இதற்கான நிதி பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்றது.

(ஒ-144)


+

J. M. J.

## உங்கள் பயண அமைப்பாளர்




★ கனடா ★ ஜெர்மனி ★ இத்தாலி
★ சுவிஸ் ★ பிரான்ஸ் ★ அமெரிக்கா

ஷை நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். ஒவ்வொரு வாரமும் எமது குழுக்கள் இறைவன் நல்லருளுடன் ஷை நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றன.

நீங்கள் விரும்பும் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

1. செல்வம்கொழிக்கும் குவைத் நாட்டில்

ஆஸ்பத்திரி, பாடசாலை மற்றும் பொது அலுவலகங்களில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக CLEANERS ஆகப் பணியாற்றுவதற்கு விரும்புகிறீர்களா?

சம்பளம்: 35 — 40 டினார்கள் குவைத்

உணவு, உறைவிடம் இலவசம்.

2. கனடா, லண்டன், பிரான்ஸ், கிறீஸ், சைப்ரஸ், லெபனான், யோர்தான், சிங்கப்பூர் வீட்டு வேலைப் பணிப்பெண்கள்

ஓரளவு ஆங்கில அறிவுடைய பெண்களுக்கு ஷை நாடுகளிலும் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு. விசா முதலிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

3. ஐக்கிய அரபு இராச்சியம் அபுதாபியில்

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | ரெயிலர்ஸ் | Tailors | — | 600 திரம் |
| 01 | வெட்டுபவர் | Cutter | — | 800 திரம் |
| 01 | டிசைனர் | Designer | — | 1000 திரம் |
| 10 | பூவேலை | Embroider | — | 800 திரம் |

பெண் தையற்காரர்கள் உடன் தேவை.

4. குவைத், சிங்கப்பூர் கப்பல் வேலைவாய்ப்புகள்.

5. சவூதி அரேபியா

சவூதி அரேபியாவில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் CLEANERS

சம்பளம்: 450 SR

ஒவர்டைம், உணவு, இருப்பிடம் இலவசம்,

மற்றும் சகல விபரங்களுக்கும் உடனே தொடர்புகொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன்.

உங்கள் பயண அமைப்பாளர்:

**S.P. ANTON**

No. 648 1|3, ஆஸ்பத்திரி வீதி,

(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

யாழ்ப்பாணம். (C 226)


# முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களின் விவரம் விரைவில் திரட்டப்படுகிறது

## துணுக்காய், பாண்டியன்குளம் முதலில் ஆரம்பம்

மாங்குளம், செப், 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்பாக ஒருங்கிணைக்கப்பட்ட விபரத்திரட்டு முதலில் துணுக்காய் பாண்டியன்குளம் பகுதி உதவி அரசாங்க பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த கிராமப் பகுதிகளில்வீடுதொழில், விவசாயம் ஆகியவை பாதிக்கப்பட்டவர்களின் விபரத்திரட்டு, படிவம் மூலம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தயாரிக்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்ட அக் குடும்பம் எங்கிருந்தாலும், அந்தக் குடும்பத்தை அப்பகுதி கிராம சேவகர் நேர்முக விசாரணை செய்து விபரங்களைத் திரட்டவுள்ளார்.

இச்செயற்பாடு ஒரு மாத காலத்துக்குள் நிறைவேற்றப்பட்டு திரட்டப்பட்ட விபரத் திரட்டுக்கள் புனர்வாழ்வு அமைச்சுக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் அனுப்பிவைத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார்.

இது சம்பந்தமான கிராமசேவகர்களுக்கு அறிவுறுத்தல் வகுப்பு மல்லாவி மகாவித்தியாலயத்தில் இன்று முல்லைத்தீவு அரசாங்க அதிபரினால் நடத்தப்படவுள்ளது.

இந்த அறிவுறுத்தல் வகுப்பில் உள்ளூர் திணைக்கள அதிகாரிகளும் பங்கு பற்றவுள்ளனர். (ஒ-94)

## மெய்வல்லுனர் போட்டி

மண்டைதீவு செப் 20

சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி மெய்வல்லுனர் போட்டி ஒன்று அண்மையில் நடைபெற்றது.

நிலையத்தலைவர் திரு. நா. தவயோகராசா தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

பிரதம விருந்தினராக சின்னமடு றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் திரு அ. அலோசியஸ் கலந்து கொண்டார்

பாரதி இல்லம் முதலிடத்தை பெற்றது [ச 88]

# பாடசாலை வளர்ச்சிக்கு ஆசிரியர் பற்றக்குறை ஒரு தடைக்கல் ஆகும்

கோப்பாய், செப் 20

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் பற்றுக்குறை ஒரு தடைக் கல்லாக அமைந்துள்ளது.

கோப்பாய் நாவலர் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் உரையாற்றிய பாடசாலையின் அதிபர் திருமதி பொன்னையா மேற்கண்டவாறு கூறினார்.

விழாவில் பிரதம விருந்தினராக வட மாநில கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் கலந்துகொண்டார்.

அதிபர் மேலும் தமது உரையில் இப் பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியர் இல்லாதிருப்பது கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோருக்கு கவலை தருகின்றது.

அதே போல் இக் கட்டிடத்தின் மேல்மாடியை விரைவில் முடிக்க கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது தெரிவாகியுள்ள ஆரம்ப பாடசா ஆசிரியர்களில் ஒரு சிலரையாவது எமது பாடசாலைக்குத்தர வேண்டும்

இப்படி அவர் கூறினார்.

கல்விப்பணிப்பாளர் தமது உரையில், இப் பாடசாலை ஏறக்குறைய 112 வருடங்களாக சமுதாயத்துக்கு சேவையாற்றி வருகிறது. ஆகவே சமுதாயம் பாடசாலைக்கு நாம் என்ன உதவியை செய்தோம் என சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றார்.

பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயலாளர் செ செல்வரத்தினமும் உரையாற்றினார்.

விழாவின் இறுதியில் கல்விப்பணிப்பாளர் ஞாபகார்த்தமாக தென்னங்கன்றுகளை நட்டார். (சி-72)

# நெடுந்தீவு மக்களின் அன்புக்குப் பாத்திரமானவர்

## லம்பேட் அடிகளாருக்குப் பாராட்டு

நெடுந்தீவு, செப் 20

நெடுந்தீவு மக்களின் அன்புக்குப் பாத்திரமாகிவிட்ட வண. பிதா ஜெறோம் லம்பேட் அடிகளை நெடுந்தீவின் மீது அன்புகொண்ட இதயங்கள் ஒருபோதும் மறக்கா.

இடமாற்றம் பெற்றுச் செல்லும் வணபிதா ஜெறோம் லம்பேட் அடிகளாருக்கு நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கம் அளித்த தேநீர் விருந்துக்குத் தலைமைவகித்து உரையாற்றிய பல. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

நெடுந்தீவு கொத்தணி அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி பேசுகையில், ''சாந்தமும் பணிவுமுடையவர்கள் நல்லாசி பெற்றவர்கள் ஏனெனில் உலகம் முழுவதும் அவர்களுக்கே உரியது என்கிறார் கிறிஸ்து. எமது பங்குத்தந்தை, அவர்களும் சாந்தம் 'மக்களன்பு' தூயசேவை என்கிற உயர்ந்த தத்துவங்களின் அடிப்படையில் பணியாற்றி உலகுக்கே உரிய ஒருவராகிவிட்டார்'' என்றார்.

அருட் திரு. ஜெறோம் லம்பேட் அடிகளார் பேசுகையில்,

நெடுந்தீவைப் பொறுத்தவரை கூட்டுறவுச் சங்கத்தின் கடப்பாடு எவ்வளவு இன்றியமையாதது என்பதை கடந்த வன்முறைகளின் போது கூட்டுறவுச்சங்கம் தனது சிறந்த பணி மூலம் மக்களுக்கு உணர்த்தியிருக்கிறது.

கிறிஸ்துநாதர் அப்பத்தை எவ்வாறு மக்களுக்கு பகிர்ந்தளித்தாரோ அதேபோன்று நெருக்கடியான காலகட்டத்தில் உணவுப் பொருள்களை நீதியான முறையில் பொதுமக்களுக்குப் பகிர்ந்தளித்து அவர்களது துயரங்களைப் களைந்து நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கம் பெருந்தொண்டாற்றியிருக்கிறது.

தன்னுடைய கஷ்டங்களைப் பொருட்படுத்தாது மக்களின் தேவைகளை நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் நோக்குடன் செயலாற்றும் தலைவர் சங்கத்திற்குக் கிடைத்தது இறைவனின் மகிமையே

இப்படி அவர் கூறினார்.

பொது முகாமையாளர் திரு இரா. தர்மலிங்கம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு ஞா. சேதீஸ்வரன் உட்பட பலர் உரையாற்றினார்கள். (இ-111)


## ஓராண்டு நினைவு அஞ்சலி



நயினை

உயர்திரு

வ. கணபதிப்பிள்ளை

அவர்கள்

தோற்றம்1913-04-04

மறைவு: 02-10-1987

திதி: 20-09-1988

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் [illegible]

(6558)

# VACANCIES IN SAUDI ARABIA

1. Hospital Cleaners — 400 SR
2. Airport Cleaners — 400 + 100
3. Boiler Technician 1
   5 years experience English speaking — SR 650—750
4. Electronic Technician 1
   Diploma & 5 years experience — SR 750—900
5. Wall Painter 5 — SR 650
6. Plumber 5 — SR 600

வயதெல்லை: 21 — 49 வரை.

இரு வாரத்தில் பிரயாணம் செய்யலாம்.

**T. V. TRAVELS & TOURIST**

BROWN ROAD, KOKUVIL.

(Railway Station Front)

(C 234)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வி ★ நிருபா விக்னேஸ்வரராஜா ★

சுதிரிப்பாய் அச்சுவேலியைச் சேர்ந்த விக்கினேஸ்வரராஜா-பவானி தம்பதிகளின் செல்வப் புதல்வி நிருபா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (20-9-88) அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, மாமா, பேரன்மார், பேத்திமார், பூட்டன்மார், பூட்டிமார், மாமிமார், மற்றும் உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (6565)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் ஸ்ரீராகவன்

(நயினாதீவு)

நயினாதீவு 5 ஏ வட்டாரத்தைச் சேர்ந்த அம்பிகைபாகன் - நகுலேஸ்வரி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செல்வன் ஸ்ரீ ராகவன் இன்று தனது முதலாவது பிறந்ததினத்தை வெகு விமரிசையாகத் தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அக்கா ஸ்ரீரங்கா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், ஆசை மாமா (கொழும்பு), மாமாமார், மாமிமார், தாத்தாமார், பேத்திமார், பூட்டாச்சி, அண்ணன்மார், அக்கமார், மைத்துனர்கள், மைத்துனிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அருளால் சகல செல்வங்களும் பெற்று நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றனர். (6551)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.

**பொருள்:**
எலியாகிய பகை கூடிக்கடல் போல் ஒலித்தாலும் என்ன தீங்கு ஏற்படும்? பாம்பு மூச்சு விட்ட அளவில் அவை கெட்டழியும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
32073
யாழ்ப்பாணம்.
20-09-1988 த. பெ. இல. 23


# அரசு செய்ய வேண்டியது

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையகம் வாழ் தமிழர்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

சகல மலையகம் வாழ் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க அரசு முடிவு செய்திருப்பதாக மேல்மாகாண சபை அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயலாளருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்திருக்கிறார்.

தென்னிலங்கைச் சிறைகளில் வருடக் கணக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்குவாழ் தமிழ் அரசியல் கைதிகள் இப்போது தான் விடுவிக்கப்பட்டு வருகிறார்கள்.

அதேபோல மலையகத் தமிழர்களையும் விடுவித்தால் அது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

பூஸா, வெலிக்கடைச் சிறைகளில் சுமார் நூறு மலையகம் வாழ் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் மா அதிபரின் பட்டியல் பிரகாரம் தெரியவந்திருக்கிறது.

காணாமற்போனதாகக் கருதப்படும் 28 மலையகம் வாழ் தமிழர்களின் பெயர்கள் பொலீஸ் மா அதிபரின் பட்டியலில் இல்லை எனச் சொல்லப்படுகிறது.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு மட்டும் துன்பம் தந்த காலவரையறையற்ற சிறைவாசம், சித்திரவதை, 'காணாமற் போதல்' என்பன இந்த வருடத்தில் மலையகம் வாழ் தமிழர்கள், தென்னிலங்கைச் சிங்கள மக்கள் ஆகியவர்களையும் வாட்டத் தொடங்கியது தெரிந்ததே.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற பேரில், அப்பாவி மக்கள் கூட வேண்டாத சங்கடங்களுக்கும், மனிதாபிமானமற்ற துன்புறுத்தல்களுக்கும், சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுவது சர்வசாதாரணமாகி விட்டது.

இந்த நிலை நீங்க வேண்டும் என்பதே இப்போது இலங்கையின் எல்லாப் பகுதி மக்களதும் விருப்பமாக உள்ளது. அந்த விருப்பம் நிறைவேறுவதற்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கி, வன்செயல்களைத் தடுப்பதற்கு சாதாரண குற்றக் கோவைச் சட்டத்தை அமுல்படுத்துவதே ஒரு மார்க்கமாகும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குமாறு நாடாளுமன்றத்தில் பல தடவைகள் அமரர் சரத் முத்தெட்டுவேகமவும் மற்றும் சில எதிர்க் கட்சி உறுப்பினர்களும் குரல் கொடுத்தனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கினால், நாட்டில் மேலும் வன்செயல்கள் பெருகும் என்று அரசாங்கத் தரப்பில் அப்போது வாதாடப்பட்டு வந்தது.

மக்களுக்குக் குறைபாடுகள் இருந்தால், அல்லது அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டால் அல்லது அநீதியும், அதர்மமும் தலை தூக்கினால் தான் மக்கள் அரசுக்கு எதிராக அணிதிரளுகிறார்கள்.

அந்த அணிதிரண்ட எதிர்ப்புக்கு, அரசு செவிசாய்க்காது தனது போக்கில் அரசாள்வதற்கு முனையும் போது வன்செயல்கள் வெடிக்கின்றன.

அரசாங்கம் நீதியாகவும், நியாயமாகவும் ஆட்சி செய்தால் வன்முறைகள் வளர்வதற்கு இடமிருக்காது. அப்போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் தேவைப்படாது.

இந்த நிலை உருவாகுவதற்கு, அரசில் அங்கம் வகிக்கும் இ. தொ. கா. தனது செல்வாக்கைப் பயன்படுத்துவது நல்லதல்லவா?

# இரு அமைப்புகளுடன் போட்டித் தவிர்ப்பு உடன்பாடு பற்றி ஆராயப்படுகிறதாம்

கொழும்பு செப் 20

வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஈ. பி. ஆர். எல். எவ். புளொட் ஆகிய அமைப்புக்களுடன் போட்டி தவிர்ப்பு உடன்பாடு ஒன்றை ஐக்கிய சோசலிச அணி செய்வது பற்றிய சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருவதாக கலவானை எம் பி டியூ குணசேகரா தெரிவித்தார்.

இப்படியான உடன்பாடு சரிவராத பட்சத்தில் ஐக்கிய சோஷலிச அணி தனித்து இத்தேர்தலில் போட்டியிடும் என்றும் அவர் சொன்னார். (இ - எ)

பர்மா இராணுவ ஆட்சியின்

# ஊரடங்கு உத்தரவை மீறி மக்கள் ஆர்ப்பாட்டம்; ரங்கூனில் ஒரே துப்பாக்கி வேட்டுச் சத்தம்

ரங்கூன், செப். 19

பர்மாவில் இராணுவ ஆட்சியை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டது.

ரங்கூனில் இரவு நேர ஊரடங்கு உத்தரவை மீறி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாக பி பி சி வானொலி தெரிவித்தது.

இடைக்கால அரசு ஏற்படுத்தப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று தொடர்ந்தும் கிளர்ச்சிகள் பரவலாக நடத்தப் படுகின்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

ரங்கூன் நகரில் நடந்த இரவு பெரும் வெடிச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுக்களும் பரவலாகக் கேட்டன என்று பி பி சி தெரிவித்தது.

அரசு எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரர்களின் தலைவர்களின் நிலைமை பற்றி தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (எ)

# ஜெயலலிதாவை ரோஜா என்றவர் இன்று பழித்துப் பேசுகிறார்

## நெடுஞ்செழியன்மீது ஹண்டே தாக்கு!

சென்னை, செப் 19

நேற்றுவரை ஜெயலலிதாவை ரோஜா என்றும் தென்னாட்டு இந்திரா என்றும் பேசிய நெடுஞ்செழியன் இன்று பழித்துப் பேசுகின்றார்.

'ஜெ' அணி பொதுச் செயலாளரும் முன்னாள் அ. தி. மு. க. அமைச்சருமான ஹண்டே முன் கண்டவாறு சொன்னார்.

வேலூரில் நடந்தகூட்டத்தில் பேசுகையில் அவர் தொடர்ந்து சொன்னதாவது;

அண்ணா இறந்ததும் நான்தான் முதல்வர் என்றார் நெடுஞ்செழியன். ஆனால் ஒரு எம். எல். ஏ. கூட ஆதரவு இல்லை. கருணாநிதி முதல்வர் பதவியைப் பிடித்துக் கொண்டார். எனக்கு எந்த அமைச்சர் பதவியும் வேண்டாம் என்று வீராப்புப் பேசிய நெடுஞ்செழியன் 15 நாள் கூட பதவி சுகம் இல்லாமல் வீட்டில் இருக்க முடியவில்லை. முதலில் நிதி அமைச்சர் பதவி தருவதாகச் சொல்லிய கருணாநிதி பதினைந்து நாள் கழித்து கல்வி அமைச்சர்பொறுப்பைத் தந்தார்.

நெடுஞ்செழியன் ஒரு கோழை இவர் சொல்கிறார் கருணாநிதியை ஆட்சிக்கு வரவிடாமல் தடுக்கும் சக்தி இவர்களுக்குத்தான் இருக்கிறதாம்.

அண்ணா கொடுத்த வாய்ப்பை பாதுகாத்துக் கொள்ள முடியாத இந்த ஆறடி மனிதர் தமிழகத்தை பிடிக்கப் போகிறாராம்.

தி. மு. க. தலைவருடன் எதிர்த்துப் போராடும் வலிமை எம் ஜி. ஆருக்குத்தான் உண்டு எங்களுடைய நேரடி மோதல் கருணாநிதியுடன் தான்.

தி. மு. க. ஆட்சிக்கு வர முடியும் என்கிறார்கள். ஆகையால் தி. மு. க. மீதும் கருணாநிதி மீதும் நம்பிக்கை இழந்து விட்டோம் என்கிறார்கள்.

ஜெயலலிதா தமிழகத்தின் முதல்வர் பொறுப்பை ஏற்பதை யாரும் தடுத்து விட முடியாது. ஏனென்றால் ஜெயலலிதா தென்னாட்டின் இந்திரா காந்தியாவார். இந்திரா காந்தியிடம் இருந்த துணிச்சல் மற்றும் பல குணங்கள் ஜெயலலிதாவிடம் உள்ளது.

மக்களின் முழு ஆதரவு ஜெயலலிதா பக்கம் உள்ளது ஆகையால் அவர் எம் ஜி. ஆரின் அடிசுவட்டில் தமிழகத்தின் முதல்வர் பொறுப்பை ஏற்பதில் எந்தத் தடையும் இருக்க முடியாது இவ்வாறு ஹண்டே பேசினார்: (எ-4)

# அமைச்சரவையில் நீடிக்க நாடகக் கலை உதவியது

## வீரப்பன் பேச்சு

சென்னை, செப். 19

''மந்திரிசபையில் தொடர்ந்து ஒன்பது ஆண்டுகள் நான் நீடிக்க நாடகக் கலையே உதவியது'' என ஆர். எம். வீரப்பன் தெரிவித்தார்.

பாலாஜி டைன் ஆர்ட்ஸ் குழுவினரின் நாடக நிறைவு விழா சென்னை வாணி மஹாலில் நடைபெற்றது, ஆர். எம். வீரப்பன் தலைமை வகித்தார்.

ஆர். எம். வீரப்பன் பேசியதாவது:-

நேயத்தோடு திரைப்பட உலகம் நாடகத்திற்குப் போட்டியாக வந்து விட்டது என கூறுகின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நாடகத்தைப் பாதிக்கின்றன என்ற பொதுவான கருத்து மக்களிடையே உள்ளது. ஆனால், நாடக மேடையில் கலைஞர்களை நேரில் காணுகிறோம். இது நாடக மேடைக்கே உரித்தான சிறப்பு அம்சம்.

நாடக மேடையில் தோன்றியவர்கள் தான் கலை உலகில் சிறந்த புகழ் பெற்றனர். எம். ஜி. ஆர், சிவாஜி போன்ற கலைஞர்கள் நாடக மேடை இல்லையென்றால் நமக்குக் கிடைத்திருக்க மாட்டார்கள். திரைப்படம், தொலைக்காட்சி இவைகளுக்குத் தாய், நாடகமேடை தான்.

தாயை அழிக்க யாராலும் இயலாது. ஐரோப்பியர், ரஷ்யரைப்போல நாடகத்தைப் போற்ற நாமும், தெரிந்து கொள்ளவேண்டும்.

நான் கலை உலகத் தொண்டன், நாடகக் குழுவில் நான் இருந்த காலங்களில், நான் கற்றுக் கொண்ட, ஒழுக்க நெறிகள் தான் என்னைத் தொடர்ந்து ஒன்பது வருடம் மந்திரி சபையில் நீடிக்கச் செய்தது. எம். ஜி. ஆரின் ஆட்சிக் காலத்தில் நாடகக்கலை அழிந்து விடாமல் இருக்க பொருட்காட்சிகளில் நாடகங்களை நடத்தும் முறையைக் கொண்டு வந்தார். நாடகமேடை உலகிற்கு ஆட்சியாளர்களையும் தந்துள்ளது என்பதை எம். ஜி. ஆர் நிரூபித்தார்.

இவ்வாறு ஆர். எம். வீரப்பன் பேசினார். (எ-4)

வெளி உலகில்

# சிங்கப்பூரில் தினமும் ஒருவர் தற்கொலை

சிங்கப்பூர், செப். 19

சிங்கப்பூரில் தினமும் ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார்.

1987 இல் 368 பேர் தற்கொலை செய்து கொண்டனர்.

விபத்து மரணங்களிலும் பார்க்க தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை 60சத விகிதமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

1987இல் வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர் தொகை 226 ஆகும்.

சிங்கப்பூரின் சனத்தொகை 26லட்சமாகும். இவர்களில் 85 சதவீதமானோர் மாடிவீடுகளில் வசித்து வருகின்றனர்.

தற்கொலை செய்து கொள்ளும் பெரும்பாலோர் மாடி வீடுகளில் இருந்து பாய்ந்து இறக்கின்றனர். இவர்களில் பெண்கள் 30சதவீதம். நான்கில் ஒரு பங்கினர் 60 வயதுக்கு மேற்பட்டோர்.

சிங்கப்பூர் சனத்தொகையில் 76 2 சதவீதம் சீனர்கள். மலாயர் 15சதவீதம். 6 5சதவீதத்தினர் இந்தியர்கள் 2 3 சதவீதத்தினர் ஏனைய இனத்தினர்.

## பத்திரிகையாளர் நாடு கடத்தல்

டோக்கியோ. செப். 19

இரண்டு பிரிட்டிஷ் பத்திரிகையாளரை சீன அரசு வெளியேற்றியது.

சீனாவில் ஷின்ஜியாங் எல்லைப் புறத்தில் இப் பத்திரிகையாளர்கள் பயணம் செய்து கொண்டிருந்த போது, நாடுகடத்தும் உத்தரவு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

பி. பி சி. லண்டன் டெய்லி டெலிகிராப் பத்திரிகையாளர்களே நாடு கடத்தப்பட்டவர்களாவர். (எ)

## பசுபிக் தீவில் தங்கச் சுரங்கம்

பசுபிக் தீவுகளில் ஒன்றான பாப்புவா நியூகினியில் எண்ணெய் வளமும் தங்கப் படிவங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இவ்வளங்கள் சரிவரப் பயன்படுத்தப்பட்டால் இத்தீவு மக்கள் உலகிலே மிகப்பெரிய பணக்காரர்களாக வாழக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று ஆஸ்திரேலியா அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நென்பசுபிக் தீவு தங்கச் சுரங்கத்தின் மீது அமர்ந்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# ஆப்கனில் இருந்து படை விலகல்; 3 மாதங்களுக்கு சோவியத் நிறுத்தியது

இஸ்லாமபாத் செப்-19

ஆப்கனிஸ்தானில் இருந்து துருப்புக்களை விலக்கிக் கொள்வதை சோவியத் யூனியன் மூன்று மாதங்களுக்கு இடை நிறுத்தி வைத்துள்ளது.

இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த சலாங் நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள பல நகரங்களை ஆப்கன் கிளர்ச்சிக்காரர்கள் கைப்பற்றியுள்ளனர்.

அதைத் தொடர்ந்தே சோவியத்யூனியன் படை விலக்கலை இடைநிறுத்தம் செய்திருப்பதாக மேற்கு ராஜதந்திரிகள் தெரிவித்தனர். (எ)

# மறைந்த கம்யூனிஸ்ட் கார்த்திகேசு மனிதரில் ஒரு மாணிக்கம்

## நினைவு தின வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், செப். 20

இன்று நாம் மறைந்த 'கம்யூனிஸ்ட் கார்த்திகேசு மாஸ்டரை' மூன்று கோணங்களில் வைத்துப் பார்வையிடலாம். அவர் மனிதரில் ஓர் மாணிக்கம் உயிர் காக்கும் தோழன், உயர்ச்சிக்காகத் தன் சுதந்திரத்தை இழக்காத ஆசிரியன்.

யாழ் மலாயன் இலங்கையர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற மு. கார்த்திகேசனின் 11 ஆவது ஆண்டு நிறைவுச் சொற்பொழிவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. எம். பி. செல்வரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

நினைவுச் சொற்பொழிவை யாழ் பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்தினார்கள்.

திரு. செல்வரத்தினம் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

தோழர் கார்த்திகேசு பாடசாலையிலும் வெளியிலும் மாணவர்களுடன் சக மாணவனைப் போல் பழகி வந்தார். இதனால் இவரின் மதிப்பு மலைபோல் வளர்ந்தது.

இவர் ஆசிரியராக மட்டுமல்ல, சிறந்த விளையாட்டு வீரனாகவும் சக ஆசிரியர்களின் வழிகாட்டியாகவும் இருந்தார்.

இவர் எக்கட்டத்திலும் தன்னை வளர்க்க முற்பட்டதில்லை.

இவரின் திறமைகளை மேலதிகாரிகள் அறிந்திருந்தும் இவருக்கு அரசியல் காரணங்களுக்காக உரிய பதவி வழங்கப்படவில்லை.

இப்படி அவர் கூறினார்.

பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை பேசுகையில் தெரிவித்ததாவது; எமது நாட்டில் எழுத்தறிவில்லாதவர்களின் எண்ணிக்கை 1946 இல் 20 சதவீதமாக விருந்தது இன்றும் இவ்விகிதாசாரம் அதேநிலையில் தான் உள்ளது.

இலங்கையில் பாடசாலைகளிலிருந்து வருடா வருடம் விடுபடுவோர் 30 சதவீதமாக இருப்பது அரசாங்கத்துக்கு மட்டுமல்ல கல்விமான்களுக்கும் விசனத்தை அளிக்கிறது.

மாணவர்கள் பாடசாலைகளில் பயில வேண்டிய காலமான முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை 3.1 வீதமானோர் தமது படிப்பை இடைநிறுத்தம் செய்கிறார்கள். [illegible] முதல் பன்னிரண்டாம் [illegible] படிப்பை இடை நிறுத்துவோரின் எண்ணிக்கை இன்னும் கூடுதலாகும்.

இதற்கான காரணங்கள் பொருளாதாரக் காரணமாயிருப்பினும் நான் இதை முழுமையாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

இதற்கான காரணங்களை வருமாறு வகுக்கலாம் (1) பெற்றோர் அக்கறையின்மை (2) மனோபாவங்கள் வளர்வடையாதிருத்தல் (3) பெற்றோர் தமது நலனை வளர்க்க பிள்ளைகளை இடை நிறுத்தல். (4) பெருந்தோட்டப் பகுதிகளில் பயிற்றப்படாத தனி ஆள் ஆசிரியரின் கண்காணிப்பு (5) இராணுவ நடவடிக்கைகள் போன்றவைகளாகும்.

ஆரம்ப பிரிவுகளில் மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகுதல் தடுக்கப்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திரு எஸ். பி சிவபாதம் இளைப்பாறிய அதிபர் திரு. எஸ் சிவபாதசுந்தரம் யாழ் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. வி. தவராஜா, தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு. சுப்பிரமணியம் வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. சிவராஜா உட்பட பல கல்விமான்கள் கருத்துரை வழங்கினர். (இ-ச)

### பகவத் கீதை சொற்பொழிவு

பகவத்கீதை தொடர் சொற்பொழிவு தாவடி ஸ்ரீ சத்யசாயிசேவா நிலயத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் மாலை 4-45 இல் இருந்து 5-30 மணிவரை நடைபெற்று வருகிறது.

'கரவைக்கிழார்' திரு க. கந்தசாமி சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகிறார். (ச)

ஜே. வி. பி — அரசு பேச்சு

# 29 ஆம் திகதிக்கு முன் முக்கிய முடிவு ஏற்படலாம்?

கொழும்பு. செப் 20

மக்கள் விடுதலை முன்னணியுடன் அரசு நடத்தி வருவதாகக் கூறப்படும் பேச்சுக்களில் இம் மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் முக்கிய முடிவு ஒன்று ஏற்பட [illegible] படுகிறது.

[illegible] மேலும் 50 மக்கள் விடுதலை முன்னணிப் பிரமுகர்களை அரசு விடுதலை செய்ய விரும்புவதாகவும் கூறப்படுகிறது.

காவலில் உள்ள 916 மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் மீதான குற்றப் பத்திரிகைகளையும் அரசு விலக்கிக் கொள்ளவிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. (இ-எ)

# கூட இருந்த கைதிகள் பலர் காணமற்போய்விட்டனர்

## விடுதலையான ஜே.வி.பி.பிரமுகர் தகவல்

கொழும்பு. செப் 20

பொலீஸ் காவலில் இருந்தபோது நான் பலமாகத் தாக்கப்பட்டேன். என்னுடன் காவலில் இருந்த பல கைதிகள் காணமல் போய் விட்டனர்.

ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணித் தலைவர்களில் ஒருவரான சாந்த பண்டார செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

உயிருடன் என்னை விட்டு வைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கவில்லை

நிபந்தனையற்ற முறையில் நான் விடுவிக்கப்பட்டேன் இதற்காக அரசியல் பேரம் பேசப்படவில்லை.

நாட்டில் இன்னொரு இரத்த ஆறு ஓடும் அபாயம் ஏற்பட்டுள்ளது அதற்கு பல குழுக்கள் தயாராகி வருகின்றன.

அவற்றிற்கு ஆயுதங்கள் வழங்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். 'பச்சைப் புலிகள்' இயக்கம் கலைக்கப்படவேண்டும்.

இப்படி சாந்த பண்டார சொன்னார். (இ-எ)

## சமய சிந்தனைகளில்

### வண்ணை பெருமாள்கோயில் தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம் செப். 20

ஈழத்துத் திருப்பதி என்று போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரத ராஜப் பெருமாள் கோயில் தேர்த் திருவிழா நாளை 21 ஆம் திகதி நடைபெறுகிறது.

நாளை காலை 9 00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும். காலை 10. 00 மணிக்கு ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராக ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் சித்திரத் தேரில் பவனி வந்து அடியார்களுக்குத் தரிசனம் கொடுப்பார்.

நேற்று சப்பறத் திருவிழா சிறப்பாக, நடைபெற்றது. [இ]

### ஆலயம் புனரமைப்பு

பண்டத்தரிப்பு, செப 20

நான்கு லட்ச ரூபா செலவில் சித்தங்கேணி தலைநகர் கம்பம்புலோ ஆதி வைரவர் ஆலயம் புனரமைக்கப் படுகின்றது.

மூலஸ்தானம் திருத்த மண்டபம், மகா மண்டபம் ஆகியன பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. (ஓ-120)

### கோமாரி தடுபூசி ஏற்றப்பட்டது

தெல்லிப்பளை வள்ளுவர் சனசமூக நிலயத்தில் தெல்லிப்பளைப் பகுதி மிருக வைத்திய அதிகாரியினால் நூறு மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி ஏற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

POLY INSTITUTE
TELLIPPALAI
O/L Day Class
நடைபெறுகின்றது.
தெல்லிப்பளையில் தனித்துவம் வாய்ந்த
கல்வி நிறுவனம் இதுவே!



# உதயன்

20 - 09 - 1988 செவ்வாய்க்கிழமை



வினு விடை வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.
அடுத்த வகுப்பு 21-09-88
புதன் 4 மணி
POLY INSTITUTE
TELLIPPALAI.


## உபஜனுதிபதி பதவியை அரசு உருவாக்காது

கொழும்பு, செப், 20

உபஜனுதிபதி பதவி ஒன்றை அரசு உருவாக்காது.

அரசமைப்புச் சட்டத்தில் இனி எதுவித மாற்றங்களையும் செய்வதில்லை என்று ஜனுதிபதி ஜெயவர்த்தன அறிவித்திருக்கின்ருர்.

ஆகவே உபஜனுதிபதி பதவி உருவாக்கப்படமாட்டாது என்று ஐ.தே.க தலைவர் ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார்.

ஜனுதிபதி பதவி வகிக்கும் வரை திரு. ஜெயவர்த்தன ஐ.தே.க தலைவராக இருப்பார்.

திரு. பிரேமதாஸா ஜனுதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அவரே கட்சித்தலைவராக இருப்பார்.

ஜனுதிபதித் தேர்தலுக்கான திகதி இவ்வாரம் அறிவிக்கப்படும் என்றும் திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார்.

(இ-எ)

### குருநகரில் திலீபன் நினைவு வாரம்

குருநகர், செப். 20

தியாகி திலீபன் நினைவு வாரமாக நேற்றைய தினத்தில் இருந்து எதிர்வரும் 26 ஆம் திகதி வரையிலான ஒருவார காலத்தை குருநகர் மக்கள் அனுட்டிக்க முடிவு செய்துள்ளனர்.

இதன் காரணமாக இவ்வாரத்தில் குருநகர் பகுதியில் எந்தவித ஆடம்பர நிகழ்ச்சிகளும் நடைபெற மாட்டா.

(ஒ-51)

### 23 ஆம் திகதி நடைபெருது

யாழ்ப்பாணம், செப் 20

றெட்பாஞ உதவித் திட்டத்தின் கீழ், கைதிகளைப் பார்வையிட உறவினர்களைப் பூஸாவுக்கு அழைத்துச் செல்வதுபற்றிய ஆலோசனைக் கூட்டம் 23 ஆம் திகதி நடைபெறமாட்டாது.

இது தொடர்பான தகவல்களைப் பெற விரும்புவோர் 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை பத்து மணியளவில் யாழ்ப்பாணம் இராசாவின்தோட்டம் வீதியிலுள்ள தடைமுகாமிலிருந்து விடுதலையாஞேர் புனர்வாழ்வுக் கழகத்தினரைச் சந்திக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(ஒ-10)


பிரத்தியேக
பகல்நேர வகுப்புக்கள்
கணக்கியல்
A/L 1989
ஸ்ரீ
B.Com [Hons.]
ஆரம்பம்:
21 - 09 - 1988
விபரங்கட்கு;
393/47, கோவில்வீதி,
நல்லூர்.
வாரத்தில் ஐந்து
வகுப்புக்கள்
நடைபெறும்.
(C-237)


### காணவில்லை

ஆஸ்பத்திரி வீதியில் யாழ் வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள வீடொன்றில் விசித்திரமான முறையில் K. D K. மேசை மின்விசிறி (Table Fan) சென்ற வாரம் காணுமல் போய்விட்டது. விஷயம் அறிந்தோர் உதயன் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். (6703)


SPECIAL
ENGLISH CLASSES

Further Education Programme
UDUVIL GIRLS' COLLEGE

★ விசேட ஆங்கிலக் கற்கை நெறிகள்.
★ பேச, எழுத, வாசிக்க, விளங்க வழி செய்யும் போதனை.
★ பாடசாலை விலகிய, உயர்கல்வி மேற்கொள்ளும் மாணவிகட்குரிய பாடத் திட்டத்தைக் கொண்டது.

கற்கை நெறிகள்:
1. Special English
2. N. C. E. (Sri Lanka / London)
● வாரத்தில் 3 நாட்கள்
● முற்பகல் — பிற்பகல் வகுப்புகள்

ஆரம்பம்: 21 - 9 - 88 காலை
தொடர்பு கொள்க.

Directress
(C 244) உடுவில் மகளிர் கல்லூரி


### FIFTH DEATH ANNIVERSARY

**Wilfred Dharmaranjan Lawrence**

You left us so suddenly.
Your last thoughts were unknown,
You left a beautiful Memory
That we are bound to own,
All our lives we shall miss you.
As the years come and go,
But in our hearts you will live for ever
Because we love you so

Fondly remembered
by
Wimala, Dinesh, Roshi
Mummy, Daddy, Sisters and brother

106, 2nd Cross Street,
Jaffna. (6690)

### யாழ் பல்கலைக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படும்.

அத்துடன், விவசாயப் பொறியியல் துறை, கைத்தொழில் பொறியியல் துறைக்கான வசதிகளும் செய்யப்படும்.

இலங்கையில் எந்தவொரு பல்கலைக் கழகத்திலும் இதுவரை மேற்கொள்ளப்படாத கடற்றுறைப் பொறியியல் (Marine Engineering), கரையோரப்பகுதித் துறைப் பொறியியல் (Coastal Engineering) ஆகியவற்றுக்கான பட்டப் படிப்பு வசதிகளும் இந்தப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்படும்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தில் உள்ளதைப் போன்ற சகல நவீனவசதிகளையும் உள்ளடக்கிக் கிளிநொச்சியில் அமைக்கப்படவிருக்கும் பொறியியல் பீடத்தை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுவருகிறது

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-ஐ)

### எடுத்த.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலுக்குப் பொருத்தமற்றது என்றனர்.

அப்போது தூதுவர் திரு. டிக்ஸிற் கூறியதாவது:-

காலவரையறையின்றி யுத்தநிறுத்தம் மேற்கொள்ளமுடியாது. எவ்வளவுகாலத்திற்கு யுத்தநிறுத்தம் தேவை என்பதைப் புலிகள் தெரிவித்துப் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்.

இந்திய அமைதிப் படை நிலையாகத் தங்கியிருப்பதற்காக இங்கு வரவில்லை. அந்நியப் படைகள் என்றஉணர்வு எமக்கு உண்டு. எங்களுக்கெனப் பெரிய தேசமும் போதிய பிரச்சினைகளும் உள்ளன.

எனினும் நல்லெண்ண அடிப்படையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவே நாம் முயன்று வருகின்ருேம்—என்ருர்.

மன்ஞர்வீதியில் உள்ள சுற்றுலா விடுதியில் இந்திய அமைதிப் படை அலுவலகத்தில் வைத்து இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

(அ-ஒ-164)

### ஊரெழு ஆலயங்களில் வழிபாடு

யாழ்ப்பாணம், செப்.20

தியாகசீலன் திலீபனின் முதலாம் ஆண்டு தினத்தை முன்னிட்டு ஊரெழு ஆலயங்களில் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை வழிபாடுகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காலை 7.30 மணிக்கு ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திலும் -8.30மணிக்கு ஊரெழு மனேன்மணி அம்பாள் ஆலயத்திலும் ஆத்மசாந்தி வழிபாடுகள் நடைபெற உள்ளன. அன்னதானமும் வழங்கப்படும். (ஒ 9)

### தொடரும் கலவரம்

ஜெரூசலம், செப்.19

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் இஸ்ரவேலிய இராணுவம் பதினைந்து பலஸ்தீனிய இளைஞர்களைச் சுட்டது.

கடந்த டிசம்பர் தொடக்கம் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தை மீட்டெடுக்கும் கிளர்ச்சியை பலஸ்தீனியர் நடத்தி வருவது தெரிந்ததே. (எ)

### வடக்கு கிழக்கு.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படும்.

★ தேர்தலின்போது இந்திய அமைதிப்படை பாதுகாப்பு வழங்கும்.

★ வடக்கு — கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் தமிழையும் உத்தியோக மொழியாக்கும் சட்டம் நிறைவேற்றப்படும்.

★ அதிகாரப் பரவல் மேலும் பயனுள்ளதாக்கப்படும்.

★ ஆயுதங்களை ஒப்படைப்போருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்.

(அ-ஒ-எ)

### திலீபனுக்கு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு ஊரெழுவில் உள்ள "லெப் கேணல் திலீபன் வீதி" என்ற பெயர்ப் பலகையும் திரை நீக்கம் செய்யப்பட உள்ளது.

தமிழீழ மக்கள் மன்றத் தலைவர் திரு க. சிவானந்த சுந்தரம் பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைப்பார்.

11-30 மணிக்கு திலீபனின் ஞாபகார்த்த மணி மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற உள்ளது.

இந்த அடிக்கல்லை யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் நாட்டி வைப்பார்." (ஒ-9)

### அடுத்த.......

(1ம்பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாசவின் இடத்திற்கு ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

பிரதமரின் கீழ் உள்ள வீடமைப்பு, நிர்மாணம், உள்ளூராட்சி, பெருந்தெருக்கள் அமைச்சுக்கு வேறெருவர் நியமனம் பெறக்கூடும்.

அதேநேரம் காலியாகவிருக்கும் கொழும்பு மத்திய நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஐ. தே. க. தலைவர் திரு. ரஞ்சன் விஜேயரத்ன அல்லது கொழும்பு மாநகர முதல்வர் திரு. சிரிசேன குரே ஆகிய இருவரில் ஒருவர் நியமனம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ 21)

## காரைநகரிலும் 12 தினங்கள் உண்ணுவிரதம்

காரைநகர், செப்.20

காரைநகர் பிரசைகள் குழுக்களின் ஏற்பாட்டில் கடந்த 15ஆம்திகதி முதல் பன்னிரு தினங்களுக்கு வாரிவளவு பிள்ளையார்கோவில் முன்றலில் உண்ணுவிரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

இதில் காரைநகரிலுள்ள இருபத்தைந்து பாடசாலைகளும் மற்றும் பொது ஸ்தாபனங்களும் கலந்துகொண்டு வருகின்றன.

இத்துடன் திலீபனின் நினைவு நாளான 26ஆம் திகதி மாபெரும் பேரணி ஒன்று நடத்தவும் ஏற்பாடாகி உள்ளது.

காரைநகரிலுள்ள பிரதான வீதிவழியாக இந்திய அமைதிப்படை முகாம் அதிகாரியைச்சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்தபின்னர் மீண்டும் ஊர்வலம் களபூமி, துறைமுகம் ஊடாக வாரிவளவை அடைந்த பின்னர் பொதுக்கூட்டம் இடம்பெறும்.

பின்பு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் எனவும் பிரசைகள் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இது இவ்வாறு இருக்க காரைநகர் எங்கும் அமைதிப் படையினரின் ரோந்து தீவிரமாகநடைபெற்று வருகின்றது.

(ஒ-73)

## ரங்கூனில் மோதல் 150 பேர் மரணம்

ரங்கூன், செப்.20

ரங்கூன் நகரில் நேற்று வீதிகளில்அரசுப்படையினரும், கிளர்ச்சிக்காரர்களும் நேருக்கு நேர் மோதிக்கொண்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

அப்போது 150 பேர் உயிரிழந்தனர் என்று பி பி.சி. தெரிவித்தது.

இராணுவ ஆட்சி ஏற்பட்ட பின்னர் இடம்பெற்ற பெரிய மோதல் இதுவாகும். (ஒ-எ)

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## கண்டெடுக்கப்பட்ட அடையாள கார்ட்டுகள்

யாழ்ப்பாணம், செப். 20

கண்டெடுக்கப்பட்ட அடையாள கார்ட்டுகள் பொதுமக்களால் 292/2, நாவலர் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் நேரில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்

206190116V தங்கம்மா கந்தையா, கொக்குவில் மேற்கு.

546861716V சந்திரயோகு ஜெனேவா, இலுப்பைக்குளம்.

397910598V நேசமணி வேலாயுதம், மானிப்பாய்.

286801366V ராசம்மா வேலுப்பிள்ளை, மகொல்கலே.

485930035V பூமணி சின்னத்தம்பி, கல்லாக்கட்டுவன்.

410361752X சுப்பிரமணியம் மணிவாசகம், அராலி வடக்கு.

242981080V விஞயகமூர்த்தி இராசரத்தினம், காங்கேசன்துறை.

602172627V கணேஸ் மகேந்திரன், கோப்பாய் தெற்கு.

446250248V குணதேவி தம்பிமுத்து, கிளிநொச்சி.

190690490V இருதயம் சுந்தரம், யாழ்ப்பாணம்.

181951109X தம்பியப்பா சிவானந்தன், வந்தாறுமூலே.

266680767V மாணிக்கம் முத்தையா, அச்சுவேலி.

666502213V சோதிமுத்து செல்வமணி, குருநகர்.

600781901X கிருஷ்ணசாமி இரகுநாதன், வண்ணர்பண்ணை.

591682431V சின்னராசா பாஸ்கரன், தம்பலகாமம்.

243370922V முருகேசு கந்தஞானி, வட்டுக்கோட்டை.

571150891V கந்தையா ஜெயதாசன், வட்டுக்கோட்டை.

495042928V அன்ரனி ஜெயநாதன் மேரி அமலோற்பவநாயகி, முல்லைத்தீவு.

686821129V செபஸ்ரியான் மரிய செபஸ்ரின, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

702470757V சபாரட்ணம் சபோதரன், ஊர்காவற்றுறை.

670080552V சுப்பிரமணியம் முருகதாஸ், மட்டுவில் வடக்கு.

457600607V கிருஷ்ணதேவி குணரத்தினம், பருத்தித்துறை வீதி.

422001441V மாப்பாணர் சங்கரப்பிள்ளை, தெல்லிப்பளை, தென்மேற்கு.

437270724V பூரணம் அருளானந்தம், ஆனைக்கோட்டை.

ஆசிரியர்களுக்கான அடையாளக் கார்ட்:-

LG No. 008056 சின்னத்தம்பி சிவராஜசிங்கம், ஏழாலை.

### நுண்கலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி

வரும் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் இசைப் பரீட்சைகள் தடைப்படாமல் இருக்கும் விதமாகவே இசைக் கருவிகளை உடனடியாகத் தருவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அத்துடன் மேற்படி கல்லூரியின் தேவைக்கென தற்காலிக கட்டட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. (ஒ-ஐ)

### லொறி இல்லை

கொடிகாமம், செப். 20

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு ப.நோ. கூ. சங்கத்தில் பலகாலமாக லொறியில்லாதிருப்பது பாவனைப் பொருள்களை பரிமாற்றஞ் செய்வதற்கு பெரிதும் இடைஞ்சலாயுள்ளதெனபாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புதியநெறியாளர் குழு இவ்விஷயம் குறித்துநடவடிக்கை எடுக்குமா? இப்படி பாவனையாளர்கள் கேட்கிருர்கள்.

(ஒ-சி-75)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லம்மா பரராஜசிங்கம்

(காலஞ்சென்ற கஸ்தூரியார் வளவு வைத்திய சிரோன்மணி பரராஜசிங்கம் அவர்களின் பாரியார்)

திருமதி நல்லம்மா பரராஜசிங்கம் காலமானர். அன்னர் காலஞ்சென்ற வைத்திய சிரோன்மணி கணபதிப்பிள்ளை பரராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், திருமதி யோகேஸ்வரி குணசிங்கம், ரகுநாதன், திருமதி கமலாசனி சிவநாதன், யோகநாதன், சிவகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தபால் அதிபர் குணசிங்கம், இலங்கை மின்சாரசபை (சுன்னகம்) சிவநாதன், கிருஸ்ணராணி, சுகுண ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் நாளை புதன்கிழமை (21-9-88) காலை 10.00 மணி அளவில் நடைபெற்று யாழ் கோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**மக்கள்**

93/21, இந்து மகளிர் ஒழுங்கை
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (6702)

### திரு.வின்சிலோ T.H. சுகிர்தரெட்ணம்

(இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா-உத்தியோகத்தர்)

17-9-88இல் காலமான திரு. வின்சிலோ-T. H. சுகிர்தரெட்ணம் அவர்களின் சேம நல்லடக்க ஆராதனை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னரின் இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காகப் பூதவுடல் உடுவில் மல்வம் சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**- குடும்பத்தினர்**

Ratna Green,
Uduvil, Chunnakam. (6699)

### திருமதி லூசியா மாகிறேற் ரத்தினம்

திருமதி லூசியா மாகிறேற் ரத்தினம் 15-9-88 வியாழன் காலமானர். அன்னர் காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், மலர், ராணி, அருட்சகோதரி மேரி மொனிக்கா, (நல்லாயன் மடம், மாங்குளம்), ஜெயமணி, றுட்ரு (ஜெனிவா), ருஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானப்பிரகாசம், சந்தியாப்பிள்ளை, யோண்பிள்ளை, யூலியற் (ஜெனிவா), சாமிநாதர், ஆகியோரின் அன்பு மாமியாரும் குலேந்திரன், மசேந்திரன், ஜோய்ஸ், அருள்திருயஸ்ரின், நவநீலன், வன்மலா, ஜோவித்தா, சாள்ஸ், வின்ஸ்ரன், றேமண், அருள்சகோதரன் அஞ்சலோ, ருஜன், ஜயந்தி, றூபன், பமலா, அருள்திருகமிலஸ், பிறியன், றெயிஸ்ரன், கஜேண், அஞ்சலி, றெமிஜியஸ், ஷாமலின், றெக்ஞே ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னரின் பூதவுடல் 21ஆந் திகதி புதன்கிழமை காலை 8-30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித மரியாள் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிருேம்.

தகவல்: **றுட்ரு பஸ்ரியாம்பிள்ளை**
'நிமால் இல்லம்'
ஊர்காவற்றுறை.
(6573)

### நியோகுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய களஞ்சியப் பாதுகாவலர் அரசாங்க வேலைப்பகுதி)

கரம்பனைச் சேர்ந்தவரும் தற்போது பண்டத்தரிப்பில் வசித்தவருமான நியோகுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை காலமானர். அன்னர் மேரி ஆனின (தங்கப்பொன்) அன்புக் கணவரும், கிறிஸ்ரிமரியதாஸ், (திருகோணமலை துறைமுக அதிகாரசபை) ஜெயராணி, ஜெயராஜ் (குவி அச்சகம், யாழ்.) யோகராஜ் (பிரான்ஸ்), செல்வராஜ் (லேயிடின் தொழிற்சாலை, யாழ்.) இந்திரா, இரட்ணராஜ் (சுவிஸ்), அருள்ராஜ் (ஜெர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லமணி பீலிக்ஸ், சவரிமுத்து, ஸ்ரெலா யோசவ்நாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனலக்ஷ்மி, யோண்பிள்ளை (T. O. தெல்லிப்பளை), ஜெயராணி, தேவி, யசிந்தா மலர், ஸ்ரனிஷ்லஸ், மலர், சித்திரா ஆகியோரின் மாமஞருமாவார். அன்னரின் பூதவுடல் 20-09-88 இன்றுகாலை 10மணியளவில் இளவாலை புனித அன்னம்மாள் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி முடிந்ததும் நல்லடக்கத்திற்காக புனித அன்னம்மாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: **G. யோண்பிள்ளை,**
(மருமகன்)

விளையாட்டு மைதான வீதி,
இளவாலை. (6701)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 20-09-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd292/2 Navalar Road, Jaffna on Tuesday 20th September 1988